**நான்காவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.**

**OS.No. 120/2020**

**தேதி:- 10-08-2026**

வா.சா.1 திரு.ஜெயராஜ் த/பெ.திரு.சுந்தரசாமி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்குவிசாரணை தொடரப்படுகிறது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வா.த.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள அ.வ.எண்.1507/1982 வழக்கை பற்றிய விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கில் என்ன முடிவானது என்று தெரியுமா என்றால் பிரதிவாதிக்கு சாதகமாக தீர்ப்பானது. அந்த தீர்ப்பில் எந்தெந்த சொத்துக்கள் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் ஒப்பந்தத்தில் சொல்லியுள்ள வழக்கு விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.2 கிரைய ஆவணம் பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் கிருஷ்ணன் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கியதாக சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அந்த கிரையத்தில் சொல்லியிருக்கும் சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்துக்களை எதன் அடிப்படையில் கிரையம் வாங்கினேன் என்றால் நான் பிரதிவாதிக்கு 2006 முதல் கொஞ்சம் கொஞ்சமாக பணம் கொடுத்திருந்தேன், அதற்காக அந்த சொத்தை எழுதிக்கொடுத்திருந்தார். வா.த.சா.ஆ.2 ஆவணத்தில் கடனுக்காக சொத்து எழுதிக்கொடுக்கப்பட்டதாக வாசகங்கள் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் அதிகாரம் பெற்ற முகவர் என்று குறிப்பிடப்பட்டுள்ள கிருஷ்ணன் எனது சகோதரியின் கணவர் என்றால்

சரிதான். அ.வ.எண்.1507/1982 வழக்கை கிருஷ்ணன் தான் பிரதிவாதிக்காக நடத்தினார் என்றால், அவர்களுக்குள் நடந்த விஷயங்கள் எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.2ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்து மேற்சொன்ன வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறதா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், சம்பந்தப்பட்டிருக்கிறது இந்த விவரத்தை எனக்கு யார் சொன்னது என்றால் கிருஷ்ணன் சொன்னார். கிருஷ்ணன் மேற்சொன்ன வழக்கை நடத்தும்போது பிரதிவாதிக்கு தெரியாமல் பல ஆவணங்களை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு கையெழுத்து மட்டும் தான் போட தெரியும், எழுதப்படிக்க தெரியாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவர் என்ன படித்துள்ளார் என்றால் அதை பற்றி தெரியாது. நானும், கிருஷ்ணனும் பேசிதான் இந்த கிரையம் முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல, செல்வராஜிடன் பேசிதான் இந்த கிரையம் முடிவு செய்யப்பட்டது. கிருஷ்ணன் இதே போல் பொது அதிகாரத்தை பயன்படுத்தி அவரது மனைவி மற்றும் மகள் பெயரில் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் கிருஷ்ணன் குடும்பத்திற்குள்ளேயே ஆவணங்களை ஏற்ப்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. நானும், எனது மைத்துனர் கிருஷ்ணனும் சேர்ந்து பிரதிவாதியின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஆவணங்களை ஏற்ப்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் போல் எத்தனை ஒப்பந்தங்கள் போட்டுள்ளோம் என்றால் ஒரு ஒப்பந்தம் தான் போட்டுள்ளோம். அது எந்த தேதியில் போடப்பட்டது என்றால் 23.02.2012 அன்று போடப்பட்டது. 15.02.2012ல் ஒப்பந்தம் ஏதாவது

போடப்பட்டதா என்றால் போடப்படவில்லை. எனது பிராதிலும், முதன்மை சாட்சியத்திலும் 15.02.2012 அன்று ஒப்பந்தம் போடப்பட்டதாக சொல்லப்பட்டிருந்தால் அது பொய்யா என்றால் அதை பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை. இரண்டு ஒப்பந்தங்கள் நடைமுறையில் இருக்கிறது என்றால் சரியல்ல, ஒரு ஒப்பந்தம் தான் போட்டுள்ளேன். வா.த.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் யாரால் சொல்லப்பட்டு, யார் தயார் செய்தது என்றால் ஆவண எழுத்தர் தான் தயார் செய்தார், விவரங்களையும் ஆவண எழுத்தர் தான் சொன்னார். வா.த.சா.ஆ.1ல் அது யாரால் தயார் செய்யப்பட்டது, யார் தட்டச்சு செய்தது என்ற விவரங்கள் இல்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண், அளவு என்ன என்றால் சர்வே எண்.596ல் 30 செண்ட் விஸ்தீரணம். இந்த சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதா, வருவாய்த் துறை ஆவணங்கள் அவர் பெயருக்கு உள்ளதா என்ற விவரத்தை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் வழக்கில் தீர்ப்பு வரும்வரை பிரதிவாதியின் அனுபவத்தில் இல்லை, தீர்ப்பிற்கு பின்னர் பிரதிவாதியிடம் இருந்தது. தீர்ப்பில் யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் முழுமையான விவரங்கள் தெரியாது, வசந்தாமணி மற்றும் செல்வராஜ் பிரித்துக்கொண்டது தெரியும். அந்த தீர்ப்பில் பிரதிவாதியின் தந்தை சொத்தில் வேண்டுமானால் உரிமை கோரலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் போட்ட தேதியில் இருந்த இன்றைய தேதி வரை ரூ.90,00,000/- இருந்தது என்பதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான். ஒப்பந்தத்தில் ரூ.10,00,000/- கொடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டிருப்பதை தவிர ரூ.10,00,000/-

கொடுத்ததற்கு வேறு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல, என்னிடம் இருக்கிறது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் வருமான வரி செலுத்தியிருக்கிறேனா என்றால் செலுத்தியிருக்கிறேன். வருமான வரி கணக்கில் இந்த தொகைகளை சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். பிரதிவாதி என்னிடம் எந்த காலத்தில் ரூ.10,00,000/- வாங்கவில்லை என்றாலும் ஒப்பந்தம் எதுவும் போடவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எந்த காலத்திலும் ஒப்பந்தத்தில் கையெழுத்து போடவில்லை என்றாலும், ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் நானும், கிருஷ்ணனும் சேர்ந்து பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம் என்றால் சரியல்ல, நானும், பிரதிவாதியும் தான் ஒப்பந்தம் செய்து கொண்டோம். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் பிரதிவாதி என்னை பாரக்கவும் இல்லை, ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவும் இல்லை என்றால் சரியல்ல. 2015 முதல் 2019 வரை கிரைய எழுதிக்கொடுக்கும்படி பிரதிவாதியிடம் எழுத்து மூலமாக கேட்கவில்லை என்றால் சரிதான், வாய்மொழியாக தான் கேட்டேன். வாய்மொழியாக கேட்டதாக சொல்வது தவறு என்றாலும், செல்வராஜிடம் எந்த காலத்திலும் வாய்மொழியாக கேட்கவில்லை என்றால் சரியல்ல, அவர் கேட்ட போது தீர்ப்பு வந்தவுடன் கிரையம் எழுதிக்கொள்ளலாம் என்று கூறினார். கிருஷ்ணன் கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்த போது தீர்ப்பு வந்த விவரம் தெரிந்துதான் கிரையம் எழுதினோம் என்றால் தீர்ப்பை பற்றி தெரியாது. 2015-லேயே தீர்ப்பை பற்றிய விவரம் தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு

காலதாமதமாக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தமே பொய்யான கிரைய ஒப்பந்தம் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் பிரதிவாதி எழுதி தருவதற்கோ அல்லது பணத்தை திருப்பி தருவதற்கோ கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல, நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Sd/- S.Mageswari Banu Rekha,**
IV Additional District Judge,
Coimbatore.